பேரூராட்சி அலுவலகம்,
தேன்கனிகோட்டை

<u>ந.க. எண். 193/2022/அ1</u>　　　　<u>நாள்: 01.07.2022</u>

# <u>ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</u>

தேன்கனிகோட்டை பேரூராட்சிக்கு பாத்தியப்பட்ட இதன் கீழ் இணைப்பில் கண்ட வேலையினை செய்துமுடிப்பதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் **19.07.2022 செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணி** வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

## <u>நிபந்தனைகள்</u>

1. மேற்படி ஒப்பந்தப்புள்ளி போடுவதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 01.07.2022 ஆம் தேதி முதல் கீழ்கண்ட இணைய தளத்தில் இருந்து கட்டணம் இல்லாமல் எடுத்துக் கொள்ளலாம். டெண்டர் படிவத்தில் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

   https://tntenders.gov.in & http://townpanchayats.tn.gov.in/tender

2. ஒப்பந்தப்புள்ளிகள் 19.07.2022 அன்று பிற்பகல் 3.00 மணி வரை மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் ஒப்பந்தப்புள்ளி அளித்தவருக்கே திருப்பி அனுப்பப்படும். அல்லது தள்ளுபடி செய்யப்படும். மேற்குறிப்பிட்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு குறிப்பிடப்பட்ட இறுதி நாளில் விடுமுறை அறிவிக்கப்படுமாயின் அதற்கடுத்த அலுவலக வேலை நாளில் மேற்குறிப்பிட்ட அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும்.

3. ஒப்பந்ததாரர்கள் தாங்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மாற்றிடவோ அல்லது திரும்ப பெற்றிடவோ வேண்டுமாயின், ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நேரத்திற்கு முன்னதாக எழுத்து மூலமாக அறிவிப்பு ஒன்றை வழங்கி ஒப்பந்தப்புள்ளிகளை திரும்ப பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகளை மாற்றி திரும்ப வழங்கும் நேர்வில் உறைகளில் கூடுதலாக "Withdrawal / Modification" என்று குறிப்பிட்டு வழங்கப்பட வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான ஒப்பந்ததாரர் சிறப்பு கலந்தாய்வு கூட்டம் 13.07.2022 அன்று தேன்கனிகோட்டை பேரூராட்சி அலுவலத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும்.

5. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி படிவம் (Technical Bid) 19.07.2022 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு தேன்கனிகோட்டை பேரூராட்சி அலுவலகத்தில் வருகைதந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் தேன்கனிகோட்டை பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அலுவலராலோ திறக்கப்படும். மேற்குறிப்பிட்ட நாளன்று விடுமுறை அறிவிக்கப்படுமாயின் அதற்கடுத்த அலுவலக வேலை நாளில் மேற்குறிப்பிட்ட அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

   தொழில்நுட்ப தகுதி படிவம் (Technical Bid) பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகத்தில் 19.07.2022 அன்று பரிசீலினை செய்யப்படும், தகுதியான தொழில்நுட்ப தகுதி படிவம் உடைய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி படிவம் (Price Bid) 22.07.2022 அன்று திறந்து இறுதி செய்யப்படும்.

6. ஒப்பந்ததாரர்கள் முன்வைப்புத் தொகையாக (EMD) மேற்கண்ட அட்டவனையில் குறிப்பிட்டுள்ளவாறு மதிப்பீட்டுத் தொகையில் 1% தொகைக்கு ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "**Executive Officer, Denkanikottai Town Panchayat, payable at Denkanikottai**" என்ற முகவரிக்கு வங்கி பணவிடை அல்லது வங்கி கேட்பு வரைவோலையினை இணைத்து ஒப்பந்தப்புள்ளி அளிக்க வேண்டும். அவ்வாறு இல்லாத முன்வைப்பு தொகை (EMD) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படாதபட்சத்தில் ஒப்பந்ததாரர்களின் முன்வைப்புத் தொகை (EMD) ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்வதற்கான காலம் முடிவடைந்த 28 நாட்களுக்குள் திரும்ப அளிக்கப்படும்.

த.பி.பா.

8. ஒப்பந்ததாரர்கள் குறைந்தபட்சம் முதல் நிலை (Class-I) ஒப்பந்ததாரர்களாக மாநில அரசின் எந்த துறையிலோ, வாரியத்திலோ அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களிலோ பதிவு செய்யப்பட்டு நடைமுறையில் இருக்க வேண்டும். அதற்கான ஆவணங்களை இணைக்க வேண்டும்.
9. ஒப்பந்ததாரர்கள் கட்டுமான பொறியியல் துறையில் குறைந்த பட்சம் கடந்த ஐந்தாண்டுகள் (2017–18 முதல் 2021–22 வரை) தணிக்கை அறிக்கை மற்றும் குறைந்தபட்சம் கடந்த மூன்றாண்டுகளுக்கு (2019–20 முதல் 2021–22 வரை) பணி அனுபவம் இருக்க வேண்டும். மேற்படி மூன்றாண்டுகளில் செய்த பணிகளில் ஒப்பந்தபுள்ளி கோரும் ஏதேனும் ஒரு பணியில் 50 சதவிகிதம் குறைவில்லாமல் பணி முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.
10. பொதுவாக தகுதிகளின் அடிப்படையில் குறைந்த விலை குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் உரிய அலுவலலர்களால் பரீசீலிக்கப்பட்ட பின் ஏற்றுக்கொள்ளப்படும்.
11. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்படாதவரையில் சட்ட வகைகளுக்குட்பட்டு, எந்தநேரத்திலும் எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ மற்றும் ஒப்பந்த நடைமுறைகளை ரத்து செய்யவோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.
12. பணிகளை விதிதாசார அடிப்படையில் ஆறு மாத காலத்திற்குள் முடிக்க வேண்டும். அவ்வாறு ஆறு மாதங்கள் முடிந்து 45 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் பணிகள் முடிக்கப்படாத பட்சத்தில் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.
13. ஒவ்வொரு மாதமும் செய்யப்பட்டுள்ள பணிகளை பொறுத்து பட்டியல் தொகை வழங்கப்படும்.
14. ஒப்பந்த தொகையில் 1% தொகைக்கு கட்டிட தொழிலாளர் நலநிதிக்கான வங்கி கேட்பு வரைவோலையினை பணி வங்குவதற்கு முன்னர் பேரூராட்சியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.
15. வேலைகளுக்கான டேவணித்தொகை 3% சதவிகிதம் செலுத்த வேண்டும். 1% சதவிகிதம் டெண்டர் கோரும் போது செலுத்த வேண்டும். மீதமுள்ள 2% சதவிகிதம் வேலைக்கான பட்டியலில் பிடித்தம் செய்யப்படும். இப்பணிகளுக்காகான தணிக்கை முடிவுற்ற பின்னர் தணிக்கை தடைகள் ஏதும் இல்லாத பட்சத்தில் இத்தொகை விடுவிக்கப்படும்.
16. ஒவ்வொரு பட்டியல்களிலும் அரசு விதிமுறைகளின்படி வருமானவரி, சேவை வரி (GST) மற்றும் கட்டிட தொழிலாளர் நலநிதி தொகை பிடித்தம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளில் செலுத்தப்படும்.
17. https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாகவும் ஒப்பந்தப்புள்ளிகளை மேற்குறிப்பிட்ட நிபந்தணைகளுக்குட்பட்டு அளிக்கலாம்.
18. ஒப்பந்த ஆவண புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள இதர ஒப்பந்த நிபந்தனைகளையும் பார்த்து அறிந்து கொள்ள ஒப்பந்ததாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
19. ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த நிபந்தனைகளுக்குப்பட்டு ரூ.20/–க்கான முத்திரை தாளில் செயல் அலுவலருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
20. ஒப்பந்தப்புள்ளிகள் அளிப்பது குறித்து வேறு ஏதேனும் தெளிவுரைகள் வேண்டுமாயின் தேன்கனிகோட்டை பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் நேரில் வந்து கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**<u>இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்கான நடைமுறைகள்:</u>**

1. ஒப்பந்ததாரர்கள் இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்கு டிஜிட்டல் சிக்னேச்சர் பதிவு (Digital Signature Certificate) செய்து ஈ–டோக்கன் (e-token) பெற்றிருக்க வேண்டும்.
2. https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலம் ஒப்பந்ததாரர்கள் தங்கள் அடையாளம் user id and passward-யை பயன்படுத்தி ஒப்பந்தப்புள்ளிகளை அளிக்கலாம்.

த.பி.பா.

3. ஒப்பந்ததாரர்கள் மேற்கண்ட இணையதளத்தில் இருந்து ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை நகல் எடுத்து அதனை நன்றாக படித்துப் பார்த்து ஒப்பந்தப்புள்ளி அளிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். தவறாக அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளியுடன் அளிக்கப்பட வேண்டிய ஆவணங்களை ஸ்கேன் செய்து இணைக்கப்பட வேண்டும்.
5. முன் வைப்புத் தொகை (EMD) செலுத்தப்பட்டதற்கான அசல் வங்கி கேட்பு வரைவோலையினை ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பதற்கு முன்பாக பேரூராட்சியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.
6. இணையதளத்தின் மூலமாக அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப காரணமாக ஏற்படும் எந்த வகையான காலதாமதத்திற்கும் செயல் அலுவலர், தேன்கனிகோட்டை பேரூராட்சி பொறுப்பாகமாட்டார்.
7. இணையதளத்தின் மூலமாக அளிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் 19.07.2022 அன்று 15.30 மணிக்குள் (சர்வர் நேரத்தின்படி) ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலருக்கு அனுப்பிட வேண்டும்.

## வேலையின் விபரம்

| சிப்பம் எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ( ரூ ) | டேவணி தொகை (ரூ) | ஷெட்டியூல் தொகை (ரூ) | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| | **15வது நிதிக்குழு அடிப்படை மான்யம் (Untied Basic Grant) முதல் தவணை** | | | | |
| 1 | பேருந்து நிலையத்தில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து, மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 5,00,000 | 5000 | 840 | 180 நாட்கள் |
| 2 | வார்டு எண்.1 ஒசூர் சாலையில் வேளாண்மைத்துறை அலுவலகம் அருகில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள மின் மோட்டாருக்கு புதிய பைப்லைன் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் | 2,00,000 | 2000 | 336 | 180 நாட்கள் |
| 3 | பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடத்தை பராமரிப்பு பணிகள் செய்தல் | 5,00,000 | 5000 | 840 | 180 நாட்கள் |
| 4 | பேருந்து நிலையத்தில் உள்ள இலவச சிறுநீர் கழிப்பறைகள் மற்றும் இதர பொது சுகாதார அடிப்படை வசதிகள் செய்தல் | 2,00,000 | 2000 | 336 | 180 நாட்கள் |
| | **15வது நிதிக்குழு அடிப்படை மான்யம் (Untied Basic Grant) இரண்டாம் தவணை** | | | | |
| 5 | வார்டு எண்.2, 4, 6, 7, 8, 11, 12, 14, 16 ஆகியவற்றில் 15 இடங்களில் மேடை அமைத்து, ஏற்கனவே உள்ள பகிர்மான குழாய் மூலம் குழாய் இணைப்பு வழங்கி 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டி அமைத்து குடிநீர் விநியோக பணிகள் செய்தல் | 4,50,000 | 4500 | 840 | 180 நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | வார்டு எண்.18 தேர்பேட்டை ஒணியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக 2 H.P. மின் மோட்டார் பொருத்தி (சிறுமின் விசைபம்பு) இரண்டு இடங்களில் 1000 லிட்டர் குடிநீர் தொட்டி அமைத்து குடிநீர் பணிகள் மேற்கொள்ளுதல் | 2,50,000 | 2500 | 840 | 180 நாட்கள் |
| 7 | வார்டு எண்.1 இல் சர்வே எண்.35/2, 43 இல் உள்ள வளமீட்பு பூங்காவில் கழிவறைகள், நடைமேடை மற்றும் இதர அடிப்படை வசதிகள் மேற்கொள்ளல் | 7,00,000 | 7000 | 1680 | 180 நாட்கள் |
| | **15வது நிதிக்குழு மான்யம் (Tied Grant) இரண்டாம் தவணை** | | | | |
| 8 | வளமீட்பு பூங்கா சர்வே எண்.35/2, 43 இல் சுற்றுச்சுவர் அமைத்தல் | 12,00,000 | 12000 | 6720 | 180 நாட்கள் |
| 9 | வார்டு எண்.3, 4, 5, 6, 8, 9, 10, 13, 14, 15 மற்றும் 17 ஆகிய வார்டுகளில் ஏற்கனவே உள்ள பழுதடைந்துள்ள குடிநீர் விநியோக பைப்லைன்கள் மாற்றி புதியதாக பைப்லைன் அமைத்தல் | 12,00,000 | 12000 | 6720 | 180 நாட்கள் |

செயல் அலுவலர்
தேர்வு நிலை பேரூராட்சி
தேன்கனிகோட்டை – 635107
கிருஷ்ணகிரி மாவட்டம்

**பெறுதல் :**

தேன்கனிகோட்டை பேரூராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் அனைவருக்கும்.

**நகல் :**

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கிருஷ்ணகிரி மாவட்டம், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், தருமபுரி மண்டலம், தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. உதவி செயற்பொறியாளர் ( பேரூராட்சிப் பணிகள்) தருமபுரி அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
5. செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், காவேரிப்பட்டிணம், / கெலமங்கலம்/பருகூர்/நாகோஜனஅள்ளி/விளம்பரம் பலகையில் பிரசுரிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.
6. இளநிலைப் பொறியாளர், பேரூராட்சி அலுவலகம், காவேரிப்பட்டிணம் தகவலறிய.
7. அலுவலக விளம்பரப் பலகைக்கு.
8. கோப்புக்கு.